# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029438

1. District : மாவட்டம் Kanchipuram PS: காவல்நிலையம் Vigilance & Anti Corruption Year: ஆண்டு 2017 FIR No.: மு.த.அ. எண் 7/2017 Date: நாள் 11/12/2017.

2. (i) Act சட்டம்: Cr. P.C Sections பிரிவுகள்: 108

(ii) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d) of the PC Act - 1988.

(iii) Act சட்டம்: - Sections பிரிவுகள்: -

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 09/12/2017 Date to : நாள் வரை -

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 08.10 hrs Time to : நேரம் வரை 18.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11/12/2017 Time : நேரம் 16.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11/12/2017 Time : நேரம் 16.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Approximately 75kms - North East.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Pethikuppam Transport check-post.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : . இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் Thiruvallur District.

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. M. Vijayakumari (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் District Inspection cell officer, Kanchipuram & Thiruvallur District. (g) Address : முகவரி o/o. the Collectorate, Kanchipuram.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) I-Incheck post :- Ao1: Tr.S. Chandran, MVI (Non-Tech), Ao2:- Tr. S.V. Ravikumar, Assistant, pethikuppam check post. II-Out check post:- Ao-1 Tr. G. Rajaram, MVI (Non-Tech), Ao-2 Tr. N. Chandra sekar, Assistant and Ao-3 Tr. C. Vijayakumar, Office Assistant, pethikuppam checkpost, Gummudipoondi Taluk, Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- delayed by the Complainant -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Unaccounted Money seized from 2 check posts (Incoming & Out going) Rs. 80,360/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) Submitted. Today on 11/12/2017 at 16:00 hrs. while I am present on duty at the O/o. the Vigilance and Anti-Corruption, Kanchipuram, I received a Complaint from Tmt. M. Vijayakumari, Kanchipuram & Thiruvallur Districts Inspection cell officer, O/o. the Collectorate, Kanchipuram, enclosed with the proceedings of Joint Surprise check conducted on 09/12/2017 at Pethikuppam Transport check-post, Gummudipoondi Taluk, Thiruvallur District. The Complaint and proceedings contents are as follows:- [illegible] (F.I.R-ல் [illegible]...)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 11/12/17

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 11/12/17
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: On 12/12/2017 at 10.30 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் T. SIVAPATHASEKARAN
Rank: நிலை DSP, V&AC, KANCHIPURAM ..........No. எண் .........

Received one copy [signature] 11/12/17

* GOP 240 34(Type-2) 90,000 Cps 21 3 16(HCL 12)p 2

**Kanchipuram V&AC, Cr.No.7/2017-FIR contents continues for Column-12:**

பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு, இராகவேந்திரா நகர், காஞ்சிபுரம். ந.கா. 783/2017, நாள்: 11.12.2017. அய்யா, பொருள்: திருவள்ளூர் மாவட்டம் - பெத்திக்குப்பம் போக்குவரத்து துறை சோதனை சாவடி, கும்முடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் - திடீர் ஆய்வினை காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் & பார்ட்டி சகிதம் கூட்டாய்வு மேற்கொண்டது தொடர்பாக - உரிய மேல் நடவடிக்கை எடுக்கக்கோரி - அனுப்புதல் - தொடர்பாக. பார்வை: எனது, 09.12.2017-ந்தேதியிட்ட செயல்முறைகள் எண். /2017, நாள்:09.12.2017. திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி வட்டம், பெத்திக்குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள போக்குவரத்து துறை சோதனைச் சாவடிகளில் (உள்வருகை மற்றும் வெளிச்செல்லுகை) வாகனங்களின் ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடம் இருந்து கட்டணத்தொகையுடன் லஞ்சப்பணமும் சேர்த்து அதிகமாக பணம் வசூலிப்பதாக கிடைத்த தொடர் ரகசிய தகவலின் பேரில், கடந்த 09.12.2017-ந்தேதி அதிகாலை 02.10 மணிமுதல் 12.00 மணிக்கு வரை சென்னை நகரப்பிரிவு-5, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் திரு.ஜே.உதயசங்கர் மற்றும் அவரது பார்ட்டி சகிதம் கூட்டாய்வினை மேற்கொண்டபோது, உள்வருகை சோதனை சாவடி அலுவலகத்தில், திரு.எஸ்.சந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர், (தொழில் நுட்பம் இல்லாத) மற்றும் திரு.எஸ்.வி.ரவிக்குமார், உதவியாளர், பெத்திக்குப்பம் சோதனை சாவடி, கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் என்பவர்கள் பணியில் ஆஜரில் இருந்தனர். அவர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டு, கணக்கு பார்த்தபோது, கணக்கில் வராத பணம் ரூ.5,220/- அதிகப்படியாக இருந்ததற்கான முகாந்திரம் எதுவும் கூறாததால், அப்பணத்தையும், அதேபோல், வெளிச்செல்கைக்கான சோதனை சாவடியை காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளராகிய தாங்கள் திரு.ட்டி.சிவபாதசேகரன் மற்றும் தங்களது பார்ட்டி சகிதம் கூட்டாய்வினை மேற்கொண்டபோது, வெளிச்செல்கை சோதனை சாவடி அலுவலகத்தில், திரு.ஜி.இராஜாராமன், மோட்டார் வாகன ஆய்வாளர், (தொழில் நுட்பம் இல்லாத), திரு.என்.சந்திரசேகர், உதவியாளர் மற்றும் திரு.சி.விஜயகுமார், அலுவலக உதவியாளர் பெத்திக்குப்பம் சோதனை சாவடி, கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் என்பவர்கள் பணியில் ஆஜரில் இருந்தனர். அவர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டு, கணக்கு பார்த்தபோது, கணக்கில் வராத பணம் ரூ.75140/-ஐ அதிகப்படியாக இருந்ததற்கு சரியான

11/12/17
DSP VAC

**KPM V&AC, Cr.No.7/2017-FIR contents continues for Column-12:**

முகாந்திரம் எதுவும் கூறாததால், அப்பணத்தையும் சேர்த்து ஆக மொத்தம் இரண்டு சோதனை சாவடிகளிலும் ரூ. 80,360/- னை மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் லஞ்சமாக பெற்ற பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. அப்பணத்தையும், ஆஜரில் இருந்தவர்களிடம் என்னால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களையும், எனது செயல்முறையுடன் சேர்த்து தங்களிடம் மேல்நடவடிக்கை எடுக்க ஒப்படைக்கிறேன். 2. இந்நிகழ்வின் தங்கள் துறை மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின் முடிவினை இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்த கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் நம்பிக்கைக்குரிய, (ஓம்/-xxx M.Vijayakumari, 11.12.2017. மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர். இணைப்பு, 1. கைப்பற்றப்பட்ட பணம் ரூ.80,360/-, 2. திடீர் ஆய்வின் செயல்முறைகள் மற்றும் 3. ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர்களிடம் (5 பேர்கள்) என்னால் பெறப்பட்ட வாக்குமூலங்களின் நகல்கள். திடீர் ஆய்வின் செயல்முறை விவரம் வருமாறு. காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் மற்றும் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் சென்னை நகர பிரிவு-5, சென்னை-16 காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் பெத்திக்குப்பம் சோதனைச்சாவடி மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் இல்லாத) அலுவலகத்தில் உள்வருகை மற்றும் வெளிச்செல்லுதல் அலுவலகத்தில் வாகன ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடம் இருந்து லஞ்சம் பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலை தொடர்ந்து, இன்று 09.12.2017 ந் தேதி அதிகாலை 02.10 மணியளவில் உள் வருகை சோதனை சாவடியில் மேற்க்கொள்ளப்பட்ட திடீர் கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கைகள்.

| | |
|---|---|
| துறைத் தலைமை அலுவலர். | போக்குவரத்து ஆணையர்<br>சேப்பாக்கம், சென்னை-05 |
| உள்வருகை ஆய்வின்போது கலந்து கொண்டவர்கள். | 1. திருமதி.எம்.விஜயகுமாரி,<br>காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்<br>மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு)<br>காஞ்சிபுரம் .<br><br>2. திரு.J.உதயசங்கர்<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை<br>சென்னை-நகரப் பிரிவு-5, சென்னை-16. |

11/12/17
DSP V&AC

**KPM, V&AC, Cr.No.7/2017-FIR contents continues for Column-12:**

3. திருமதி.G.S.தமிழரசி,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம்.

4. திருமதி.நீலவேணி,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை
சென்னை-நகரப் பிரிவு-5, சென்னை-16.

5. திரு.S.சந்திரன், த/பெ. C.சண்முகம்,
மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் இல்லா), பெத்திக்குப்பம் உள்செல்கை சோதனைச்சாவடி.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி வட்டம், வெளி மாநிலத்திலிருந்து சென்னை நோக்கி வரும் மோட்டார் வாகன சோதனை சாவடி, பெத்திகுப்பத்தில் இன்று 09.12.2017-ந்தேதி அதிகாலை 02.10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. திருமதி.எம்.விஜயகுமாரி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் அவர்களின் தலைமையில், சென்னை நகர பிரிவு-5-ன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் அவர்களது பார்ட்டியுடன் இணைந்து திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் கூட்டாய்வு மேற்கொண்டபோது, திரு.எஸ்.சந்திரன், வயது-50 த/பெ. சண்முகம், மோட்டார் வாகன ஆய்வாளர், பெத்திக்குப்பம் சோதனை சாவடி, கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம் அவர்களும், திரு.S.V.ரவிக்குமார், வயது-52, த/பெ.விவேகானந்தன், உதவியாளர், பெத்திக்குப்பம் சோதனை சாவடி, கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம் ஆகியோர்கள் பணியிலிருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரான நான், மேற்படி அலுவலர்களுக்கு என்னையும் மற்றும் ஆய்வுக் குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து, பின் ஆய்வுக் குழுவில் உள்ள அனைவரும் தங்களது உடமைகளை மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் உதவியாளர் ஆகியோர்களிடம் சுயசோதனை செய்துகாட்டி, அலுவலக சோதனையை ஆரம்பித்து, அலுவலகம் முழுவதும் சோதனை செய்தோம். அது சமயம், அன்றைய தினம் காலை பணிக்கு ஆஜரில் இருந்த திரு.ஆர்.கண்ணன் என்பவர் இரவு பணியில் விடுப்பு பெற்று சென்றுள்ளதாக மோட்டார் வாகன ஆய்வாளர் தெரிவித்தார். அதற்கான அனுமதி விண்ணப்பத்தையும், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சந்திரன் அவர்கள் ஆஜர் செய்தார்.

(signature) 11/12/17
DSP V&AC

**KPM, V&AC, Cr.No.7/2017-FIR contents continues for Column-12:**

அதுசமயம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சந்திரன் அவர்கள் அமர்ந்திருந்த நாற்காலிக்கு எதிரே உள்ள மேஜை டிராயரில் சோதனையிட அதில் ரூ.4,66,660/- இருந்தது. மேற்படி பணம் குறித்து, மேற்படி அலுவலர்களிடம் விளக்கம் கேட்க, கடந்த 08.12.2017-ந்தேதி 20.00 மணிமுதல் இன்று 09.12.2017-ந்தேதி 02.10 மணி வரையில் ரசீது எண்.F1166496 முதல் F1166625-ன்படி வசூல் செய்த தொகை என விளக்கம் அளித்தனர். ஆவணங்களை சரிபார்க்க சரியாக இருந்தது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளரின் இருக்கைக்கு இடது பக்கத்தில் இருந்த காக்கி நிற அட்டை பெட்டியில் 500X4 = 2,000/-, 100X27=2,700/-, 200x1=200/-, 50x4=200/-, 20x6=120/- ஆக மொத்தம் ரூ.5,220/- இருந்தது. மேற்படி பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் உதவியாளர் ஆகியோர்களிடம் விளக்கம் கேட்க, உரிய விளக்கம் அளிக்காததால், மேற்படி ரூ.5,220/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த இரும்பு பீரோவை சோதனை செய்ய, பீரோவில் இருந்த சிமெண்ட் நிற சூட்கேஸில் ரூ.18,10,250/- இருந்தது. மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்க, அப்பணம் 08.12.2017-ந்தேதி காலை 08.00 மணி முதல் இரவு 08.00 மணிவரை முறைப்படி வசூல் ஆனத் தொகை என விளக்கம் அளித்தனர். அது சம்மந்தமான ஆவணங்களை சரிபார்க்க சரியாக இருந்தது. மேற்படி சோதனையில், மேற்கண்டவாறு ரூ.5,220/- பணம் மட்டுமே கைப்பற்றப்பட்டது. மேலும், 09.12.2017-ந்தேதி காலை 03.33.49 மணியளவில் மற்றும் 04.06.56 மணியளவில் இன்கம்மிங் செக்போஸ்ட், பெத்திக்குப்பத்தின் அகௌண்ட் ஸ்டேட்மெண்ட்டானது திரு.ரவிக்குமார்-2 என்ற கணிணி பிரிண்ட் அவுட் எடுத்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் சான்றொப்பம் இட்டு பெறப்பட்டது. மேற்படி, சான்றொப்பம் இட்ட பிரிண்ட் அவுட்டில் நானும், சென்னை நகர பிரிவு-5 காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும் அதில் கையொப்பம் செய்தோம். மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் உள்ள பணத்தை கேட்க அவரது மேல் சட்டை பாக்கெட்டிலிருந்து ரூ.350/- எடுத்து ஆஜர் செய்தார். பணம் கையிருப்புப் பதிவேட்டை சோதனை செய்ததில் அதில் ரூ.800/- உடன் பணிக்கு வந்ததாக இருந்தது குறித்து கேட்டதற்கு ரூ.450/- செலவாகிவிட்டது என்று தெரிவித்தார். எனவே, அவருடைய பணம் ரூ.350/- அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மோட்டார் வாகன உதவியாளரிடம் உள்ள பணத்தை கேட்க அவரது மேல் சட்டை பாக்கெட்டிலிருந்து ரூ.180/- எடுத்து ஆஜர் செய்தார். பணம் கையிருப்புப் பதிவேட்டை சோதனை செய்ததில் சரியாக இருந்ததால், அவருடைய பணம்

(signature) 11/12/17

**KPM, V&AC, Cr.No.7/2017-FIR contents continues for Column-12:**

ரூ.180/- அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இந்த சோதனையானது, 09.12.2017-ந்தேதி அதிகாலை 02.10 மணிக்கு துவங்கி, 04.30 மணிக்கு முடிக்கப்பட்டது. பிறகு இந்த அலுவலகத்திற்கு எதிர்புறத்தில் அமைந்துள்ள சென்னையில் இருந்து வெளிமாநிலங்களுக்கு செல்லும் வாகனங்களை சோதனை செய்யக் கூடிய சோதனை சாவடியினை சோதனை செய்ய சென்றபோது, காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.டி.சிவபாதசேகரன் அவர்களும், அவரது பார்ட்டி சகிதம் சோதனை சாவடியை கண்காணித்துக்கொண்டிருந்தனர்.

| | |
|---|---|
| வெளி செல்லும் சோதனை சாவடி ஆய்வின்போது கலந்து கொண்டவர்கள். | 1. திருமதி.எம்.விஜயகுமாரி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு), காஞ்சிபுரம்<br>2. திரு.T.சிவபாதசேகரன் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புப்பிரிவு, காஞ்சிபுரம்<br>3. திரு.V.கணேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் பிரிவு, காஞ்சிபுரம்<br>4. திருமதி.N,மணிமேகலை, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் பிரிவு, காஞ்சிபுரம்.<br>5. திரு.G.ராஜாராமன், வயது (50) த/பெ. N.குருமூர்த்தி, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் இல்லா), பெத்திக்குப்பம் வெளிசெல்கை சோதனைச்சாவடி. |

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி வட்டம், சென்னையிலிருந்து வெளி மாநிலங்கள் நோக்கி செல்லும் மோட்டார் வாகன சோதனை சாவடி, பெத்திகுப்பத்தில் இன்று 09.12.2017-ந்தேதி அதிகாலை 04.50 மணிக்கு திருமதி.எம்.விஜயகுமாரி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் அவர்களின் தலைமையில், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் T.சிவபாதசேகரன் மற்றும் அவர்களது பார்ட்டியுடன் இணைந்து திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் கூட்டாய்வு மேற்கொண்டபோது, மோட்டார் வாகன ஆய்வாளர் G.ராஜாராமன், வயது-50 த/பெ. N.குருமூர்த்தி, மோட்டார் வாகன ஆய்வாளர், பெத்திக்குப்பம் சோதனை சாவடி, கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம் அவர்களும், திரு.N.சந்திரசேகர், வயது-58, த/பெ.S.K.நஞ்சப்பன் உதவியாளர்,

T. Sivapatha Sekaran
11/12/17
DSP V&AC

**KPM, V&AC, Cr.No.7/2017-FIR contents continues for Column-12:**

பெத்திக்குப்பம் சோதனை சாவடி, கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம் மற்றும் C.விஜயகுமார் வயது (52), த/பெ. K.சின்னசாமி, உதவியாளர் ஆகியோர்கள் பணியிலிருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரான நான், மேற்படி அலுவலர்களுக்கு என்னையும் மற்றும் ஆய்வுக் குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து, பின் ஆய்வுக் குழுவில் உள்ள அனைவரும் தங்களது உடமைகளை மேற்படி அலுவலர்களிடம் சுயசோதனை செய்துகாட்டி, அலுவலக சோதனையை ஆரம்பித்து, அலுலகம் முழுவதும் சோதனையிட்டோம். அதுசமயம் மோட்டார் வாகன உதவியாளர் திரு. N.சந்திரசேகர் அவர்களின் மேஜை டிராயரில் ரூ.63,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்க கடந்த 08.12.2017-ந்தேதி 20.00 மணிமுதல் இன்று 09.12.2017-ந்தேதி 05.05 மணி வரையில் ரசீது எண். P6094217 முதல் P6094327 வரைபடி வசூல் செய்த தொகை என விளக்கம் அளித்தனர். ஆவணங்களை சரிபார்க்க சரியாக இருந்தது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளரின் மேஜைக்கு வலது பக்கமிருந்த மற்றொரு மேஜையின் டிராயரில் சோதனையிட்டபோது, 2000X6 = 12,000/-, 500X25=12,500/-, 100x4=400/-. 50X3=150/-, 20X3=60/-, 10X3=30/- ஆக மொத்தம் ரூ.25,140/- இருந்தது. மேற்படி பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர், உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோர்களிடம் விளக்கம் கேட்க, உரிய விளக்கம் அளிக்காததால், மேற்படி ரூ.25,140/ -ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி அலுவலக பதிவறையில் இருந்த சிவப்பு மற்றும் கறுப்பு நிற ஹோண்டா ஜெனரேட்டரை சோதனை செய்ய, 2000X5 = 10,000/-, 500X63=31,500/-, 200x1=200/-, 100X83=8,300/- ஆக மொத்தம் ரூ.50,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர், உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோர்களிடம் விளக்கம் கேட்க, உரிய விளக்கம் அளிக்காததால், மேற்படி ரூ.50,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனையின்போது, மொத்தம் ரூ.75,140/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த இரும்பு பீரோவை சோதனை செய்ய, பீரோவில் மேல் அறையில், கறுப்பு நிற பையில் ரூ.1,22,300/- இருந்தது. மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்க, அப்பணம் 08.12.2017-ந்தேதி காலை 08.00 மணி முதல் இரவு 08.00 மணிவரை முறைப்படி வசூல் ஆன தொகை என விளக்கம் அளித்தனர். அது சம்மந்தமான ஆவணங்களை சரிபார்க்க சரியாக இருந்தது. மேலும், 09.12.2017-ந்தேதி காலை 04.56.19 மணியளவில் மற்றும் 05.01.47 மணியளவில் அவுட்கோயிங் செக்போஸ்ட், பெத்திக்குப்பத்தின் அகௌண்ட் ஸ்டேட்மென்ட்டானது திரு.என்.சந்திரு1 என்ற கணினி பிரிண்ட் அவுட் எடுத்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் சான்றொப்பம் இட்டு பெறப்பட்டது. மேற்படி, சான்றொப்பம் இட்ட பிரிண்ட் அவுட்டில் நானும், காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.டி.சிவபாதசேகரன் அவர்களும், கையொப்பம் செய்தோம். இந்த சோதனையானது, 09.12.2017-ந்தேதி அதிகாலை 04.50 மணிக்கு துவங்கி, 06.50 மணிக்கு

11/12/17
DSP V&AC

**KPM, V&AC, Cr.No.7/2017-FIR contents continues for Column-12:**

முடிக்கப்பட்டது. மேற்படி இரண்டு அதாவது உள் மற்றும் வெளி சோதனை சாவடிகளில் கணக்கில் வராத பணம் மொத்தம் ரூ.80,360/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், மோட்டார் வாகன ஆய்வாளரிடம் உள்ள பணத்தை ஆஜர் படுத்தக் கோரியபோது ரூ.2,400/-ஐ ஆஜர் செய்தார். பணியாளர் பணம் கையிருப்புப் பதிவேட்டை சோதனையிட சரியாக இருந்தால் அந்தப் பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. உதவியாளர் அவர்களிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய கோரியபோது தனது பேண்ட் பாக்கெட் மணி பர்சிலிருந்து ரூ.350/-ஐ ஆஜர் செய்தார். பணியாளர் பணம் கையிருப்புப் பதிவேட்டை சோதனையிட சரியாக இருந்தால் அந்தப் பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அலுவலக உதவியாளர் அவர்களிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்யக் கோரியபோது ரூ.5,20/-ஐ சட்டைப் பாக்கெட்டிலிருந்து ஆஜர் செய்தார். பணியாளர் பணம் கையிருப்புப் பதிவேட்டை சோதனையிட சரியாக இருந்தால் அந்தப் பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது ஆஜரிலிருந்த இரண்டு சோதனை சாவடி அலுவலர்களின் வாக்குமூலங்களை மேல் நடவடிக்கைக்காக பதிவு செய்யப்பட்டது. மேலும் இரண்டு மோட்டார் வாகன ஆய்வாளர்களிடமிருந்தும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை சான்றொப்பமிட்டு விசாரணைக்காக பெறப்பட்டது. அனைத்து நடவடிக்கைகளும், இன்று 09.12.2017-ந்தேதி காலை 12.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

(ஒம்/-எம்.விஜயகுமாரி),
காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்
மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்
(இருப்பு), காஞ்சிபுரம்,

(ஒம்/-T.சிவபாதசேகரன்),
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்புப்பிரிவு,
காஞ்சிபுரம்..

(ஒம்/-J.உதயசங்கர்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்புத்துறை
சென்னை-நகரப் பிரிவு-5,
சென்னை-16.

(ஒம்/.V.கணேசன்),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு,
காஞ்சிபுரம்

(ஒம்/-G.S.தமிழரசி),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு,
காஞ்சிபுரம்.

(ஒம்/-N,மணிமேகலை)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு,
காஞ்சிபுரம்.

(ஒம்/-நீலவேணி),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்புத்துறை
சென்னை-நகரப் பிரிவு-5,
சென்னை-16.

(ஒம்/-S.சந்திரன்)
த/பெ. C.சண்முகம்,
மோட்டார் வாகன ஆய்வாளர்
(தொழில் நுட்பம் இல்லா),
பெத்திக்குப்பம் உள்செல்கை
சோதனைச்சாவடி.

(ஒம்/-G.ராஜாராமன்),
த/பெ. N.குருமூர்த்தி,
மோட்டார் வாகன ஆய்வாளர்
(தொழில் நுட்பம் இல்லா),
பெத்திக்குப்பம் வெளிசெல்கை
சோதனைச்சாவடி.

[handwritten: A Sampathy Selv... 11/12/17 DSP V&AC]

**Kanchipuram V&AC, Cr.No.7/2017-FIR contents continues for Column-12:**

The above complaint was received and registered in Kanchipuram V&AC, Cr.No.07/AC/2017/KM u/s 102 Cr.P.C & 13(2) r/w 13(1)(d) of the Prevention of Corruption Act-1988 on 11.12.2017 at 16.00 hrs (Sd.xxx, DSP, V&AC, Kanchipuram).

The original FIR along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, Statements of Accused, Cash Rs.80,360/- and seized attested copy of the registers maintained at office of the both check post at the time of surprise check, are submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and the other copies are forwarded to Superior Officers concerned.

11/12/17

**(T.SIVAPATHASEKARAN),**
Deputy Superintendent of Police,
Vigilance & Anti-Corruption,
Kanchipuram.